**நாள்: 03.03.2026**
**O.S. No. 38/2023**

**வா.சா.1**
**பெயர்: சுரேஷ் , த/பெ. தங்கையன்**

**2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

தாவா புலஎண். 470/7 க்கு வடபுறம் 470/6 உள்ளதா என்றால் இல்லை. கிழக்குபுறம் உள்ளது. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள கதவு எண்.3/22/19 வீடு புலஎண். 470/7 ல் அமையவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிடப்படுள்ள மேற்படி கட்டுமானம் வீடு அல்ல என்றாலும் பொருட்களை பாதுகாத்து வைக்க கூடிய குடோன் என்றாலும் அது புலஎண்.470/6 ல் அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல. அட்சரேகை தீர்க்கரேகையின் படி புகைப்படம் எடுத்தால் தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு திருவாரூர் தியாகராஜ நகரில் அமையப்பெற்றுள்ளதாக தெரியவருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கு சொந்தமானது என்ற அடிப்படையில் பரிகாரம் கோருகிறேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.23 ஆவணமான 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தில் கிரய மதிப்பு ரூ.24/- லட்சம் எனவும் சொத்து மதிப்பு ரூ. 72,09,000/- எனவும் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணமான 4ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி அவரது பொது அதிகார முகவரான 3ம் பிரதிவாதி மூலம் எழுதி கொடுத்த கிரய பத்திரத்தில் கிரய மதிப்பு ரூ. 20,23,000/- லட்சம் எனவும் சொத்து மதிப்பு ரூ.53,35,100/- எனவும் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா அ-அட்டவணை சொத்தில் கண்டுள்ள மின்இணைப்பு எண் போர்வெல்லுக்கு உள்ளதா அல்லது தனிப்பட்ட மின் இணைப்பா என்றால் தனிப்பட்ட மின் இணைப்பு ஆகும். தாவா அ-அட்டவணையில் கண்டுள்ள

மின்இணைப்பு எண்.2039 வீட்டிற்குரியதா என்றால் ஆமாம். போர்வெல்லுக்கு உரிய மின் இணைப்பு எண் என்ன என்றால் 984 ஆகும்.

மேற்படி அ.சா.எண் 23மற்றும் 25 ஆகிய ஆவணங்களின் கண்டுள்ளப்படி கிரய தொகை என் தகப்பனாரால் கண்டுள்ளதா என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. நானும் என் தகப்பனாரும் ஒன்றாக தான் வாழ்ந்து சுமுகமாக தான் இருந்துவருகிறோம் என்றாலும் விற்பனை செய்யப்பட்ட சொத்துகள் மீது கூடுதல் தொகை பெறவேண்டுமென்ற நோக்கத்தில் வஞ்சக கூட்டு அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு வினையப்பட்ட விதத்தில் கேடுற்றது என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. மேற்படி கிரய சாசனங்களின் அடிப்படையில் தாவா சொத்துகளை 2, 4 பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்ற முறையில் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளின் மீது என்தாயருக்கு உள்ள உரிமையை விளம்புகை கோருவதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை கிடையாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.03 18:27:21 +0530